# முடிவுரை

**‘சவ்வாதுமலை மலையாளிகளின் வாழ்வியல் முறைகள்’** எனும் இவ்வாய்வில் கீழ்க்காணும் முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

**‘சவ்வாதுமலை அமைவிடமும் இருப்பிடச் சூழலும்’** எனும் பகுதியில் கிழக்குமலைத் தொடர் தோற்றப் பின்னனி, அமைந்துள்ள பகுதி, கிழக்குமலைத் தொடரில் அமைந்துள்ள குன்றுகள் பற்றிய பொதுவான செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. சவ்வாது மலையில் இயற்கை நறுமண பொருட்கள் அதிகமாக விளைந்ததால் அப்பெயர் வந்துள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 3000 அடி உயரத்தில் காணப்படுகிறது. இதன் சிதோஷன நிலைகள் பிறப் பகுதிகளில் இருப்பதிலிருந்து சற்று வேறுப்பட்டு அமைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

சவ்வாதுமலையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் பண்டையக் காலத்தில் ‘பல்குன்றக்’ கோட்டம், என்று அழைக்கப்பட்டது. பல்குன்றக் கோட்டத்தைச் சிறப்புடன் ஆட்சி செய்த மன்னர் ‘நன்னன்சேய் நன்னன்’. இம்மன்னனின் ஆட்சி சிறப்பைப் பற்றியும், சங்க இலக்கியமான ‘பெரும்பாணாற்றுப்படை, மலைப்படுகடாம்’ போன்ற இலக்கியங்கள் இதனை மெய்ப்பிக்கின்றன என்பதையும் சான்றுகள் வழி அறிய முடிந்தது. மேலும் இம்மலையில் ஐம்புக் குள்ளர்கள் வாழ்ந்ததற்கான வீடுகளும், தற்கால கருவிகளும், நடுகற்களும், சுடுமண் பொம்மைகளும் பல்வேறு இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

இம்மலைக்கு இயற்கை வளங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கும் காடுகள், மலைகள், தாவரங்கள், விலங்கினங்கள், பறவையினங்கள், காட்டில் கிடைக்கக்கூடிய விலை உயர்ந்த மரங்கள் பற்றிய செய்திகள் சுட்டப்பட்டுள்ளன. மலைகளில் இருக்கும் ஆறுகள், நதிகள், அணைகள், சுற்றுலா மையங்கள், மலையின் தனித்தன்மைகள் மற்றும் அங்கு வாழும் பிற இனமக்கள் பற்றிய செய்திகளும் இடம்பெறுகின்றன.

**‘மலையாளிகளும் சமூகமும்’** எனும் பகுதியில் பழங்குடி என்னும் சொல் தரும் விளக்கம் அறிஞர்கள் கூறும் விளக்கம் பழங்குடிகள் என்பவர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு சமவெளிப் பகுதியில் இருந்து ஆதிக்க வர்கத்தால் விரட்டப்பட்டு மலைப்பகுதிகளில் குடியேறியவர்கள் இன்றைய பழங்குடிகள் என்றும், ஆராயப்பட்டுள்ளது. இந்தியாவில் 577 பழங்குடி இனமக்கள் வாழ்ந்து வருவதாகவும், அவற்றில் 75 பழங்குடிகள் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்றும் அறிய முடிகிறது.

‘மலையாளி’ என்னும் சொல் மலையை ஆள்பவர்கள் என்னும் பொருண்மையின் அடிப்படையில் உருவானது என்றும், பாண்டிய வம்சத்தின் மன்னன் ஒருவன் ஆட்சி முறைகளில் ஏற்பட்ட பூசல் காரணமாகக் காஞ்சிபுரத்திலிருந்து சென்றதாகவும், காஞ்சியை விட்டுப்போகும் போது மலையாளிகளிடம் சவ்வாது மலையை ஆளும்படி சொல்லிச் சென்றதாகவும், நாட்டார் கதைகள் மூலம் விளக்கப்படுகின்றன. மலையாளிகள் ‘காராளர்’ ‘வெள்ளாளர்’ என்று இரு பிரிவினர் உண்டு. காராளர் என்பது ‘கார்’ மேகத்திலிருந்து வரும் பனியைக் ‘காரை’ கட்டி ஆள்பவா்கள் காராளா் என்றும், ‘வெள்ளாளர்’ என்பது தன்மையான நீர்ப் பெருக்கினை கடலில் செல்லாது மறுத்து வயலிற் செலுத்தி வேளாண்மை செய்ததால் வெள்ளாளர் என்று பெயர் வந்தது என்றும் அறிய முடிந்தது.

மலையாளிகள் மஞ்சள் கலந்த பழுப்பு நிறமும், கறுத்த மேனியும், சிலர் கருப்பான நிறம், நடுத்தர உயரம், திடகாத்திரமான உடல் போன்றவைகளை இயற்கையிலேயே பெற்றவர்களாக இருக்கின்றனர். தங்களுடைய வீடுகளைக் காலத்திற்கு ஏற்றார் போல் கட்டுவதற்கான அறிவினைப் பெற்றவர்களாகவும், வீடுகட்டுவதற்கான பொருட்களைத் தலையின் மேல் சுமந்தே சென்றனர் என்பதையும் விளக்கப்பட்டுள்ளது. மலையாளிகள் குடியிருப்புகளை, ஊடு என்றும், கொட்டாய் என்றும் கூறுகின்றனர். இந்தக் குடியிருப்புக்கள் இரண்டு நிலைகளில் அமைந்துள்ளது. இவர்கள் பேசும் மொழி தமிழாகும். எனினும் இம்மக்களிடத்தில் அதிகமான வட்டார வழக்குச் சொற்கள் இருப்பதையும் அறிய முடிகிறது. இவர்களின் சமூக அமைப்பானது மந்திரிக் கவுண்டர், நாட்டார், கங்காணி, ஊர்க் கவுண்டர், நாட்சேவர் எனச் சமூக தலைவா்களின் அமைப்புப் படிநிலைகளைக் கொண்டுள்ளன.

மலையாளிகள் முழுக்க முழுக்க காடுகளையே சார்ந்து வாழ்வதால் காட்டில் கிடைக்கக்கூடிய கிழங்குகள், காய்கள், கொட்டைகள், கீரைவகைகள், பழங்கள், தேன், காட்டு விலங்குகள் போன்றவைகளே இவர்களின் பிரதான உணவாகவும் இருந்தன. கல்வி என்பது இம்மக்களிடையே பல காலங்களாக எட்டாதவையாக இருந்தது. பள்ளிகள் இருந்தும் சரியான போக்குவரத்து வசதியின்மையால் ஆசிரியர்களால் மலைக்குச் சென்று கல்வியைக் கற்றுக் கொடுக்க முடியாதச் சூழல் இருந்துள்ளதையும் காண முடிகிறது. தங்களுடைய காடுகளில் விளையும் பொருட்களைச் தலை சுமையாகவேச் சமவெளிப் பகுதிகளுக்குச் தூக்கிச் செல்கின்றனர். இப்பழங்குடி மக்களின் அறியாமையை அறிந்த தரகர்களும், வியாபாரிகளும் மலையாளிகளின் பொருட்களைக் குறைவான விலைக்கே எடுத்துக் கொள்வதையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**‘மலையாளிகளின் தொழில்சார் பண்பாடு’** எனும் நான்காம் இயலில் மலையாளிகள் காடுகளில் சேகரிக்கப்படும் காடுப்படுப் பொருட்களான கிழங்குகள், கொட்டைகள், பழங்கள், புற்கள் போன்றவற்றையும், அது விளையும் பருவங்களையும் இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. காடுப்படுப் பொருட்களில் மிக முக்கியமானதும், சுவையூட்டியுமான தேன் எவ்வாறு எடுக்கப்படுகிறது, என்னனென்ன வகையான தேன் கூடுகள் இம்மலையில் கிடைக்கின்றன. இதன் பருவகாலங்கள் மற்றும் தேன் எடுக்கச் செல்பவர்களின் உறவு நிலைகள் பற்றிய செய்திகள் ஆராயப்பட்டுள்ளன. மேலும், இவர்கள் தேனைக் கண்டவுடன் எழுப்பும் ஒலி, தேன் எடுக்கும் உத்தி முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

வேட்டையாடுதல் என்பது ஆணுக்குரியது. மலையாளிகள், முன்பு குறிப்பிட்ட காலங்கள் மட்டுமே வேட்டைக்குச் சென்றனர். இனப்பெருக்கக் காலங்களில் வேட்டைக்குச் செல்வதில்லை. சினையுற்ற விலங்குகளை வேட்டையாடுவதில்லை என்பதையும் அறியமுடிந்தது. பறவைகளைப் பழம், மரங்கள், நீர் நிலைகள், உள்ள பகுதியில் கண்ணி வைத்தும், ‘பிசின்’ (பசை) வைத்தும் பிடித்துள்ளனர். விலங்குகளை, பொறிவைத்தும், கண்ணிவைத்தும் பிடித்துள்ளனர் என்பதை இலக்கியங்களோடு பொருத்திக் காட்டப்பட்டுள்ளன. மலையாளிகளின் முக்கியமானத் தொழில் வேளாண்மை ஆகும். காட்டெரிப்பு, கொத்துக் காடு, புனல் காடு, மானாவரிப் பயிர்ச் சாகுபடியைச் செய்து வந்தனர், காட்டெரிப்பு வேளாண்மையின் மூலம் வனங்கள் அழிக்கப்படுவதாக அரசு தடை விதித்தது. எனவே இவர்களின் வேளாண்மை முறைகள் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் முடங்கிவிட்டன.

மானாவரி பயிர்களான, சாமை, எள்ளு, கொள்ளு, தினை, வரகு போன்றவற்றைப் பயிர் செய்து வருவதையும் இத்தகைய வேளாண்மை முறை சங்கக் காலத்திலிருந்தே இருந்து வருவதையும் சான்றுகள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. வேளாண்மைக்கு அடுத்தப்படியாக மலையாளிகளின் தொழில் ஆடு, மாடு மேய்தல் ஆகும். இவைகள் தங்களுடைய தொழிலுக்கு முதன்மையான கருவியாகச் செயல்படுவதோடு மட்டுமல்லாமல், மலையாளிகளின் பொருளாதாரத் தேவையை நிவர்த்திச் செய்பவையாகவும் இருந்து வருவதைக் காணமுடிகிறது. மலையாளிகளின் குடும்ப மதிப்பை இவர்களின் கால்நடைகளை வைத்தே மதிப்பிடுகின்றனர் என்றும் அறிய முடிகிறது.

**‘மலையாளிகளின் சடங்குகளும் நம்பிக்கைகளும்’** எனும் ஐந்தாம் பகுதியில் இவர்கள் பிறப்பு முதல் இறப்பு வரை செய்யக் கூடிய சடங்குகள் பற்றி ஆராயப்பட்டுள்ளன. இங்குக் குழந்தைப் பேற்றின் முக்கியத்துவம் பற்றியும், குழந்தை இல்லாதவர் சமூகத்தில் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர், எப்படி மதிக்கப்படுகின்றனர் போன்ற செய்திகள் இடம்

பெற்றுள்ளன. மலையாளிகள் குழந்தைப்பேறு இல்லாதவருக்கு உரிய மதிப்பைத் தருவதில்லை. திருமணமானவர்களுக்குக் குழந்தைபேறு மிக முக்கியமாகிறது. குழந்தைப்பேறு இல்லாதவர்களைச் இச்சமூகம் ‘மலடி’ என்ற பட்டம் சூட்டி பலவாறு இகழ்ந்து உரைக்கிறது. சடங்கு சம்பிரதாயங்களில் இருந்து ஒதுக்கி வைக்கிறது. எனவே ஒரு பெண்ணிற்குக் குழந்தைப்பேறு என்பது முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

மலையாளி இனமக்களிடையே பிரசவம் தாய் வீட்டிலேயே நடைபெறுகிறது. குழந்தைக்குப் பெயர் சூட்டு விழா இவர்களுடைய குல வழக்குப்படி குலதெய்வ கோவிலிலேயே நடைப்பெறுகிறது. குழந்தைக்குக் குலதெய்வங்களின் பெயரோ அல்லது அவர்களுடைய முன்னோர்களின் பெயர்களோ சூட்டப்படுகின்றன. காது குத்து விழாவும் குல தெய்வம் கோவிலிலே இவர்களுடைய வசதிக்கேற்றார் போல் நடத்துகின்றனர். மலையாளிகளிடையே பூப்புச்சடங்குகள் பெரிதாகச் செய்யப்படுவதில்லை. இருப்பினும் பூப்படைந்த பெண்கள், தீட்டுபட்டவராகக் கருதப்படுகிறார். தீட்டு நீங்கும் நாட்கள் வரை அந்தப் பெண் தனிக் குடிசையில் இருக்கின்றாள். இறவு நேரங்களில் அவளுக்கு உறுதுணையாக முதியோர்கள் இருக்கின்றனர். பூப்படைந்த பெண் தங்கிருக்கும் குடிசையில் துடப்பம், இருப்புப் பொருளான அருவாள், அல்லது ஆணிகள் வைக்கப்படுகின்றன. இது தீய ஆவிகளிலிருந்து அப்பெண்ணைக் காக்கும் பொருட்டு வைக்கப்படுகிறது என்று விளக்கப்பட்டுள்ளது.

மலையாளிகள் திருமணச் சடங்கின்போது பழங்காலம் முதற்கொண்டே இன்று வரை ஜாதகம் பார்க்கும் பழக்கம் கிடையாது. தங்கள் இனத்திற்குள்ளேயே உறவுமுறைகள் உள்ள பெண்களையே எடுப்பதும், கொடுப்பதுமான வழக்கத்தைக் கொண்டுள்ளனர். திருமணம் மணமகன் வீட்டிலே நடைபெறுகிறது. மலையாளிகள் பெண்ணுக்கு வரதட்சனைக் கொடுத்தே பெண் எடுக்கின்றனர். திருமணத்தை இவ்வினப்பெரியோர்களே முன் நின்று நடத்துகின்றனர். திருமணம் முடிந்ததும் ‘மறுமனைப் புகுதல்’ என்னும் சடங்கு நடத்தப்படுகிறது.

மலையாளிகள் திருமணத்தில் தாய்மாமனே பெண்ணைத் தூக்கிவைத்தல், முன்நின்று நடத்துதல் என முக்கியப் பங்கு வகிக்கிறார். மலையாளிகள் இறப்புச் சடங்கின் போது தவறாமல் அனைவரும் கலந்துக்கொள்கின்றனர். பிறந்த வீட்டுக் கோடி, புகுந்த வீட்டுக் கோடி என இருமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இறப்புச் சடங்கில் தோட்டிற்கு மிக முக்கியப் பங்கு உண்டு. இறந்தவருக்கு ஆண் வாரிசுகளே கொள்ளி வைக்கும் மரபுக் காணப்படுகிறது. ஆண் வாரிசுகள் இல்லாவிட்டால் இறந்தவரின் சகோதரர் மகன்கள்

கொள்ளி வைத்து குடம் உடைக்கின்றனர். இச்சமூகத்தில் கொள்ளிவைத்தலும், குடம் உடைத்தலும் ஆண் வாரிசுகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது.

மலையாளிகளின் வாழ்க்கைக்கு உறுதுணையாக இருப்பவை நம்பிக்கை ஆகும். பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு வகையான நம்பிக்கைகளைக் கொண்டவர்களாக இருந்து வருகின்றனர். பேய், பிசாசு, ஆவி, விலங்குகள், பறவைகள், நாள், நட்சத்திரம், திசைகள் எனப் பல்வேறு நம்பிக்கைகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. தெருக்கூத்தில் நடிக்கின்ற நாடகங்கள் பெரும்பாலும் மகாபாரதக் கதையிலிருந்தே தேர்வு செய்யப்படுகிறது. தெருக்கூத்துச் சடங்கைப் பொருத்தும், நிகழ்வை ஏற்பாடு செய்பவர்களைப் பொருத்தும் நாடகம் அமைவது உண்டு. கூத்தில் பெண் வேடங்களை ஆண்களே ஏற்று நடிக்கின்றனர். ஒப்பனைகள் கதாப்பாத்திரங்களுக்கு ஏற்ற வகையில் மாறுபடுகின்றன.

சவ்வாதுமலை மலையாளிகளின் திருவிழாக்கள் ஊர்த் திருவிழாக்கள் என்றும், குலதெய்வத் திருவிழாக்கள் என்றும் இரண்டு விதமான வழிப்பாடுகள் நடத்தப்படுவதையும் ஊர்த்திருவிழாக்களில் நவீனத் தொழில் நுட்பத்தின் தாக்கத்தால் ஒலி-ஒளிப் படக் காட்சிகள் இடம்பெற்றிருப்பதையும், இந்த ஆய்வேடு விளக்குகிறது. குலதெய்வங்கள் அல்லாதப் பிற தெய்வங்களுக்கும் வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. அமைப்பு முறையில்லாத இவர்களின் கோயில்கள் நவீனத் தாக்கத்தால் சில அமைப்புகள் வைத்து கட்டப்பட்டுள்ளதும் விவாதிக்கப்பட்டுள்ளது.

**‘கால மாறுபாடும் மலையாளிகளின் பண்பாட்டுப் புத்தாக்கங்களும்’** எனும் இப்பகுதியில் நவீனத் தாக்கத்தினால் இவர்களின் தொழில் முறைகளின் இன்றைய நிலைகள் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளன. சமூக அமைப்புக்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் உணவு, உடை மற்றும் குடியிருப்புகளில் அமைந்த மாறுதல்கள், பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. சமவெளிப்பகுதி மக்களின் தொடர்பால் தங்களுடைய விளைப்பொருட்கள் சுரண்டப்படுவதையும், இவர்களின் அறியாமையின் காரணமாக நசுக்கப்படுவதையும் காணமுடிகிறது. இன்றைய தலைமுறையினர் ஓர் அளவுக்கு எழுதப் படிக்க கற்றிருப்பதால் தங்களுடைய பொருளாதார தேவையை நிவர்த்திச் செய்துக் கொள்வதற்காக நகர்புறப் பகுதிகளுக்குச் சென்று பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்கப்படுவது எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

தகவல் தொடர்புச் சாதனங்கள் இன்று மலையாளிகளிடையே ஒரு பொழுதுப் போக்குக் கருவியாக இயங்கி வருவதை அறியமுடிகிறது. பல்வேறு கிராமப் பகுதிகளுக்குச் சாலை வசதிகள் இன்றி தங்களுடைய விளைப்பொருட்களை இன்றும் தலைச் சுமையாகவே சுமந்து செல்லும் ஒரு அவலநிலையே காணமுடிகிறது. தமிழகப் பழங்குடிச்

சமூக வரலாற்றில் ஒரு பகுதியாக இருக்கும் மலையாளிகளின் வாழ்க்கைக் கூறுகள் இன்று பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வளர்ச்சியடைந்து வருவதையும், இவ்வாய்வேடு வெளிப்படுத்தியுள்ளது. மேற்கண்ட நிலைகளில் மலையாளிகளின் வாழ்வியலை இயன்ற வரை விளக்குகின்ற வகையில் அமைந்துள்ளதை உணரலாம். காலம் நிகழ்த்தி வரும் மாற்றத்தால் பொருளாதார வளம் கருதி பல மலையாளிகளும் சமவெளிப்பகுதிகளை நாடிச் செல்வதையும் நாம் நோக்க வேண்டும். அதனால் நாகரிக நிலையில் அம்மக்களும் பல மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

கல்வியைப் பொறுத்தவரை இன்றைய தலைமுறையினர் கல்வி கற்க ஆரம்பித்துள்ளனர். எனினும் ஆரம்பக் கல்வி என்ற அளவிலே அம்மக்களின் கல்வி நிலை அமைகின்றது. ஆதலால் உயர் கல்வியின் இன்றியமையாமை பற்றிய விழிப்புணர்வினை அம்மக்களிடையே ஏற்படுத்தல் என்பது அவசியமாகின்றது. அதைப் போலவே மதுப்பழக்கத்திற்கு அடிமையாகிய மலையாளி இனப்பழங்குடி மக்களிடையே அப்பழக்கத்தால் விளையும் தீங்கு பற்றி எடுத்துக்கூறி விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் என்பது தேவையான ஒன்றாகின்றது. இந்த இரு நிலைகளிலும் நல்ல மாற்றங்கள் ஏற்படுமானால் மலையாளிகளின் வாழ்வியல் முறைகளிலும் நல்ல பல முன்னேற்றங்களைக் காணலாம்.

**மேலும் செய்ய வேண்டியவை**

ஆரம்பக் காலங்களில் இடம் விட்டு இடம்பெயர்ந்து வேளாண்மை செய்து வாழ்ந்து வந்த மலையாளி இனப் பழங்குடி மக்கள் இன்று அரசாங்கம் வழங்கிய இடத்தில் நிலையான குடிசைகளை அமைத்து வாழ்கின்றனர். இவர்களின் வாழிடங்கள் காடுகளுக்குள் இருப்பதால் காற்று, மழை, வனவிலங்குகள் போன்றவற்றால் இவர்களின் தரமற்ற குடிசைகள் எளிதில் சேதமடைந்து உயிர்சேதத்தை ஏற்படுத்துகின்றன. எனவே அரசு இவர்களுக்கு தரமான வீடுகளை அமைத்துக் கொடுத்தால் இவர்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்கு அவை உதவும்.

அரசு இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலப்பங்கீடு முறையானதாக இல்லை. புதிய திருமண உறவை ஏற்படுத்திக் கொண்டவர்கள் தந்தையின் நிலங்களிலே வீடுகளை அமைத்து வாழ்வதால் இடநெருக்கடியும், பொருளாதார நெருக்கடியும் ஏற்படுகிறது. அதனால் அனைவருக்கும் நிலம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சமவெளிப் பகுதி மக்கள் இவர்களை ஏமாற்றி நிலங்களை அபகரித்து வருகின்றனர். இவற்றை அரசு தலையிட்டு நிலங்களை மீட்டு இவர்களுக்கே திருப்பி கொடுக்கப்பட வேண்டும்.

மலையாளிகளுக்கு வேளாண்மைப் பற்றிய கல்வி அவசியமாக வழங்கப்படவேண்டும். இடம்பெயர் வேளாண்மை முறையை விட்டுவிட்டு ஓரிடத்தில் தங்கி விவசாயம் மேற்கொள்வதால் அதிக உற்பத்தியைப்பெறத் தேவையான வழிமுறைகளை நல்க வெண்டும். மேலும், இங்கு அதிகமாக விளையும் சாமை, தேன் போன்ற உற்பத்திப் பொருளுக்குத் தகுந்த விலையை நிர்ணயம் செய்து அரசே கொள்முதல் செய்ய வேண்டும். அரசு கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தியிருந்தாலும் அவை ஒரு குறிப்பிட்ட இடங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மலையாளிகளின் குடியிருப்புகளிலும் அமைத்துக் கொடுத்தால் இவர்கள் உற்ப்பத்திச் செய்த பொருட்களை எளிமையாகக் கொள்முதல் செய்ய ஏதுவாக அமையும்.

இவர்கள் குடியிருப்பின் பெரும்பாண்மையான பகுதிகளுக்குப் போதுமான சாலை வசதிகளும், போக்குவரத்து வசதிகளும் காணப்படவில்லை. அதனால் இவர்கள் உற்பத்திச் செய்தப் பொருட்களைத் தலைச்சுமையாகவே பலமையில்கள் சுமந்துக்கொண்டு நகர்புறங்களுக்குச் சென்று விற்பனை செய்து வருகின்றனர். எனவே இந்நிலைகளை மாற்ற சரியான பாதைவசதிகள் இல்லாத மலைக் கிராமங்களுக்கு சாலைவசதிகள் அரசு செய்துதர வேண்டும். அப்பொழுதுதான் அவசர காலங்களில் மருத்துவமனையை நாடிச் செல்வதற்கும், இவர்களின் குழந்தைகள் கல்வி கற்கச் சென்று வருவதற்கும் பயனுடையதாக இருக்கும்.

இவர்களின் குடியிருப்புப் பகுதிகளில் போதுமான மின்வசதிகளும், மருத்துவ வசதிகளும் செய்து தரப்படவில்லை. இரவு நேரங்களில் காட்டு விலங்குகளும், பூச்சிகளும் இவர்களை தாக்குவது உண்டு. அதனால் அவசர காலங்களில் மருத்துவமனையை சென்றடைவதற்குள் அதிகமான உயிரிழப்புக்கள் இவர்களிடத்திலே ஏற்படுகிறது. இந்நிலையை மாற்ற அரசு போதிய மருத்துவ வசதிகளை இவர்களின் குடியிருப்புப் பகுதிகளில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பது இவர்களின் கோரிக்கையாகும்.

மலையாளிகளின் வாழ்வியலைப் பொது நிலையில் விரிவாக ஆராய்ந்து பார்க்கும் இவ்வாய்வானது மேலும் பல ஆய்வுகளுக்கு இடமளிக்கின்றது. மலையாளிகளின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவை ஒரு தலைப்பின் கீழ் தனிநிலை ஆய்வாக மேற்கொள்ளலாம். மேலும் மலையாளிகளின் சமயவழிபாடும் மருத்துவம், வாய்மொழி இலக்கியங்கள், அம்மக்களிடையே உள்ள கலைகள் போன்றவற்றையும் தனித்தனி ஆய்வுக்கான களங்களாக உள்ளன. அது மட்டுமின்றி மலையாளிகளின் வாழ்வியலைப் பிற இன மக்களின் வாழ்வியலோடு ஒப்பிட்டு ஆய்வதற்கும் இந்த ஆய்வு இடந்தருகின்றது.